*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(1), 2022*

# இலங்கையில் தனியார் வகுப்புக்களும் அதன் தாக்கங்களும்: ஓர் சமூகவியல் விமர்சன ஆய்வு

**ஏ.ஆர். அஸ்றஜ் அஹமட்**
சமூகவியல் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Corresponding Author: asrajrazaak97@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*தனியார் வகுப்புக்கள் என்பது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக அறிவினையும் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்கள் பணம் செலுத்திக் கற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கல்விசார் அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. இலங்கையில், 1931ஆம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தி தொடர்சியாகக் பாடசாலைக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை இலவசமாக மாணவர்களுக்கு வழங்குகின்ற போதும், மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுகின்றமை அதிகரித்து வருகின்றது. இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் எவ்வாறான காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை அடையாளம் காண்பது ஆய்வின் நோக்கமாகும். ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நோக்கமாதிரி ஆய்வுக்கான மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில், இலங்கையில் தனியார் வகுப்புக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வுகைளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் தெரிவுசெய்யப்பட்டன. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வுவாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளினூடாக இவ் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் அறிக்கை, புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. இத் தரவுகளின் பகுப்பாய்வின் மூலம் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாகி வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய கல்விப் பின்னணி, பொருளாதாரப் பின்னணி மற்றும் அரசியல் பின்னணிகள் என்பவற்றினை ஆய்வானது கண்டறிந்து பகுப்பாய்வு செய்துள்ளது.*

**பிரதான சொற்கள்:** *தனியார் வகுப்புக்கள், கல்விப் பின்னணி, பொருளாதாரப் பின்னணி, அரசியல் பின்னணி*

## 01. அறிமுகம்

உலகில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற ஓர் உலகளாவிய நிகழ்வாக தனியார் வகுப்புக்கள் மாறிவருகின்றது என்பதை பல்வேறு ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் (பிரேய மற்றும் லைகின்ஸ், 2012). மேலும், தனியார் வகுப்புக்கள் பரவலான மற்றும் முன்னேற்றமான கல்வி முறைக்கு ஓர் சான்றாக உள்ளது (ஷங், 2015). தனியார் வகுப்பு என்பது இலங்கை மற்றும் பங்களாதேஷ் போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் மட்டுமன்றி பல அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் ஓர் பொதுவான நிகழ்வாக உள்ளது. உதாரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவற்றில் மாணவர்கள் தங்களது கல்விக்கான மேலதிக அறிவினை தனியார் வகுப்புகளினூடாக பெற்றுகொள்கின்றார்கள். மேலும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில், குறிப்பாக ஆசியாவில் உள்ள பல நாடுகளில் மாணவர்கள் தனியார் வகுப்புக்களினூடாக கல்வியை பெற்றுக் கொள்வது மிக வேகமாக வளர்ச்சியடைகின்ற நிகழ்வாக உள்ளது என ப்ரே (2007) வலியுறுத்துகின்றார். இதனால், தனியார் வகுப்புக்கள் கல்வித் துறையில் ஒரு குறிபிடத்தக்க இடத்தைப் பெற்று வருகின்றது.

இத் தனியார் வகுப்புக்கள் பிரதான இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று பாடசாலைகளில் தங்களது கல்வி அடைவினை தெடர்ச்சியாக பேணுவதற்கும், இரண்டு பிரதான பாடங்களில் உள்ள குறைபாடுகளை அல்லது சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் அமைகின்றது (ஷங், 2015 சோங் மற்றும் பலர், 2013). அதேபோல், குறைந்த கல்வி அடைவு மட்டத்திலுள்ளவர்கள் தமது நிலையினை அதிகரிப்பதற்காக தமது நண்பர்களை கொண்டும் இத் தனியார் வகுப்புக்களை நாடுகின்றார்கள் (ஷங், 2015; சோங் மற்றும் பலர், 2013). அதேவேளை, இத் தனியார் வகுப்புக்கள் குறைந்த கல்வி அடைவு மட்டத்திலுள்ள மாணவர்களை விடவும் அதிக கல்வி அடைவு மட்டத்திலுள்ள மாணவர்களுக்கே அதிக நுழைவு வாய்ப்பினை கொடுத்து இணைத்துக் கொள்கின்றன (குயில்ல மற்றும் போஸ், 2014 குக், 2013). உலகளாவிய ரீதியில் தனியார் வகுப்புக் கல்வி என்பது வேகமாக வளர்ச்சியடைவதன் காரணமாக ஓர் தேவையாக மாறியுள்ளது (பல்லேஜெதரா, 2011).

தனியார் வகுப்புக்கள் சில நாடுகளில் வெவ்வேறு தன்மைகளுடன் இயங்குகின்றன. பாடசாலை கல்விசார் பாடங்களுடன் பெறப்பட்ட அறிவினை மேலும் மேம்படுத்தும் ஓர் செயன்முறையாக இடம்பெறுகின்றது (பிரேய மற்றும் லைகின்ஸ், 2012). மேலும் தனியார் வகுப்புக்கள் என்பது மாணவர்கள் தங்களது கல்வியில் மேலதிகமான அறிவினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் துறைசார் ஆசிரியர்களிடம், விரிவுரையாளர்களிடம் மற்றும் பட்டதாரிகளிடம் பணம் கொடுத்து தமது கல்விக்கு மேலதிமாக அறிவை பெற்றுக் கொள்ளும் செயன்முறையாகும் என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (றிஜ்ஜல், 2016). இத்தகைய தனியார் வகுப்புக்கள் இரண்டு வகையான கட்டமைப்பில் இடம்பெறுகின்றன. ஒன்று, மாணவர்கள் பாடஆசிரியர்களிடம் சென்று கற்றல். அதாவது பாடம் தொடர்பான ஆசிரியர்களை மாணவர்கள் தேடிக் கற்றல். இரண்டாவது, மாணர்களை தேடி ஆசிரியர்கள் சென்று கற்பித்தல்.

இக் கட்டமைப்பின் அடிப்படையில் இலங்கையில் மூன்று வகையான தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன. ஒன்று, தனித்துவமான தனியார்வகுப்பு (Induvial tuition class) : இவ் வகையானது ஒன்று அல்லது மூன்றுக்கு குறைந்த மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கு முறை. இரண்டு, குழு தனியார்வகுப்பு (Group tuition class): இம் முறையானது 5-50 வரையிலான மாணவர்களை கொண்டு கற்பிக்கும் முறையாகும். மூன்றாவது, பொதுவான அல்லது மண்டப தனியார்வகுப்பு (Common or Hall tuition class) : இம் மூன்றாவது முறையில் சுமார் 50-1000 வரையிலான மாணவர்களை பெரிய அறை ஒன்றில் உள்ளடக்கி பாடங்களை பொதுவாக கற்பிக்கும் முறை. இலங்கையில் பெரும்பான்மையான தனியார்வகுப்புக்கள் இம் மூன்றாவது முறையிலேயே இடம்பெறுகின்றன (அஸங்க, 2012). மேலும், தனியார் வகுப்புக்கள் என்பது மீத்திறன் குறைவான, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கே தேவையான ஒன்றாகும் (சந்துடுர், 2016). இவ்வாறான விளக்கத்தினையும், வரையறைகளையும் மற்றும் வகைகளையும் உலகலாவிய ரீதியாவும், இலங்கையிலும் தனியார் வகுப்புக்கள் கொண்டுள்ளன.

சில்வா (1994) என்பவரின் கருத்துப்படி இலங்கையில் 1990ஆம் ஆண்டில் தரம் ஆறாம் ஆண்டு மாணவர்களில் எண்பது வீதமான (80%) மாணவர்கள் தனியார் வகுப்புக்கு செல்கின்றனர், இதே போன்று தரம் பதினொராம் ஆண்டு மாணவர்களில் எழுபத்தைந்து சதவீதமான (75%) மாணவர்கள் தனியார் வகுப்புக்கு செல்கின்றனர். அதுறுபன் (2013) மற்றும் பலரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் எழுபத்தைந்து சதவீதமான (75%) இலங்கை மாணவர்கள் உயர் கல்வி மற்றும் உயர்நிலைப் பாடசாலைகளில் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றனர் என முன்வைக்கின்றார்கள். மேலும், சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் பாடசாலைக் கல்வியை பெற்றுக் கொள்வதனை விட தனியார் வகுப்புக் கல்வியினையே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்புக் கல்வியில் பங்குபற்றுகின்றார்கள் (ப்ரேகேம் மற்றும் பலர், 2012).

இதே போன்று, இலங்கையில் அரச பாடசாலைகளை சேர்ந்த கனிஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை மாணவர்கள் பாடசாலை கல்வியினை பொருப்படுத்தாது தனியார் வகுப்புக் கல்விக்கு முக்கியத்தும் வழங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. அத்தோடு குடும்பங்களில் கல்விக்காக வரவு செலவில் நாற்பத்தைந்து வீதமான (45%) வருமானம் தனியார் வகுப்புக்களுக்கு செலவு செய்யப்படுகின்றது (Institute of Policy Studies,

2017). இந்தவகையில் எழுபத்தைந்து வீதமான (75%) அரச பாடசாலை மாணவர்கள் இலங்கையில் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர் என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (அஸங்க, 2012).

பெரும்பான்மையான பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பணம் செலுத்தியே தனியார் வகுப்புக் கல்வியினை பெற்று கொடுக்கின்றனர். இதனால் இலங்கையில் தனியார் வகுப்புக் கல்வி இலவசக் கல்வியை பாரிய சவாலுக்குட்படுத்துகின்றது (அஸங்க, 2012). மேலும் அஸங்க குறிப்பிடுகையில் 1995-1996 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தனியார் கல்வி என்பது கல்வியில் ஆடம்பரமான ஒரு செயன்முறையாக காணப்பட்டது என்றும், பின்னர் 2006-2007ஆம் ஆண்டுகளில் கல்வித் தேவையாக மாற்றப்பட்டது. இதனால் குறைந்த வருமானம் பெருகின்ற குடும்பங்களில் தனியார் வகுப்புக் கல்வி சுமையாக மாறியுள்ளது.

எனவே மேற்குறித்த விடயங்கள், மாணவர்கள் தனியார் கல்வியை நாடுவது அதிகரித்துக் கொண்டு வருவதினை முன்வைக்கின்றது. ஆகவே, இவ்வாறான பின்னணிகளுடன் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைகின்ற போது, தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் எவ்வாறான காரணங்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பது தொடர்பாக எவ்விதமான ஆய்வுகளும் ஆராயவில்லை என்கின்ற ஆய்வு இடைவெளியினை (Research gap) நிரப்பும் முகமாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுவதனால் முக்கியத்துவம் பெறுகின்றது.

### 02. ஆய்வுப் பிரச்சினை

இலங்கை அரசினால் 1931ம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வி அறிமுகப்படுத்தி அது தொடர்ச்சியாக பல வளர்ச்சிகளையும், அபிவிருத்தியையும் இலவசமாக மாணவர்களுக்கு வழங்குகின்ற போதும் ஏன்? அரச பாடசாலை மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர்? மாணவர்கள் இவ்வாறு தனியார் வகுப்புக்களை நாடுவதில் எவ்வாறான பின்னணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது? என்கின்ற கேள்விக்கு விடைகளை அடையாளம் காணல் என்பது ஆய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்படுகின்றது.

### 03. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது இதன் இலக்கை அடைவதற்காக பின்வரும் நோக்கத்தை முன்வைக்கின்றது. இதன்படி ஆய்வின் பிரதான நோக்கம் இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் எவ்வாறான காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை அடையாளம் காண்பதாகும். இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தும் கல்விப் பின்னணிகளை அடையாளம் காணல், இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தும் அரசியல் பின்னணிகளை அடையாளம் காணல், இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தும் பொருளாதாரப் பின்னணிகளை அடையாளம் காணல் ஆய்வின் துணை நோக்கங்களாகும்.

### 04. ஆய்வு முறையியல்

ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக மாதிரி அலகுகளைத் தெரிவு செய்யும் முறைமை இவ்வாய்வு பின்பற்றப்படுகின்றது. இதற்காக நோக்கமாதிரி ஆய்வுக்கான மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில், இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளம் காண்பதற்காக இலங்கையில் தனியார் வகுப்புக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. இவ் ஆய்வில் பண்புசார் ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளினூடாக இவ் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் அறிக்கை, புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன.

## 05. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

இலங்கையின் கல்வி வரலாறானது தனித்துவமான வரலாற்றைக் கொண்டதாகவுள்ளது. பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் உதவியுடன் அச் சமயங்கள் தொடர்பான கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியது (அலிசானா, 2010). இலங்கையில் மேலைத்தேய கல்வி முறை ஆங்கிலேயர் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது (அலிசானா, 2010). அந்தவகையில் ஆரம்ப காலங்களில் இலங்கையில் கல்வி சமயங்களினடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. கரையோரப்பகுதிகளில் ஆங்கிலேயர்களின் மிஷனரிப் பாடசாலைகளை அரம்பித்து அதனூடாக கிறிஸ்தவ மதக் கல்வி மற்றும் ஆங்கில மொழியை கற்பித்தனர். காலணித்துவ காலங்களில் இலங்கையில் 1931ஆம் ஆண்டு இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது (அஸங்க, 2012). அக்காலத்தில் பாடசாலை கல்வி முறையே படிப்படியாக வளர்ச்சியடைந்தது, இதனால் தனியார் வகுப்புக் கல்வி என்பது அறிமுகமில்லாத ஒன்றாக அமைந்திருந்தது.

1980ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் சமூக, பொருளாதாரம், அரசியல் மற்றும் கல்வி போன்றவற்றில் பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் உதவியுடன் அம் மதங்கள் தொடர்பான கல்வி வளர்ச்சியடையத் தொடங்கின (அலிசானா, 2010). இலங்கையில் தனியார் வகுப்புக் கல்வி பரவலான அதிகாரபூர்வமற்ற கல்வித் துறையாக வளர்ச்சியடைத் தொடங்கியது (தமயேந்தி, 2017). குறிப்பாக இலங்கையில் கிராமப்புற பாடசாலை மாணவர்களைவிட நகரப்புற பாடசாலை மாணவர்களே அதிகம் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்றனர் (அஸங்க, 2012). இதனடிப்படையில், தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் அல்லது வளர்ச்சியில் எவ்வாறான கல்வி, அரசியல் மற்றும் பொருளாதார பின்னணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதனை ஆராய்வதற்கு முன்னர் தனியார் வகுப்புக்கள் தொடர்பான எண்ணக்கருவை பகுப்பாய்வு செய்வது கட்டாயமானதாக உள்ளதனால், அவற்றினை பின்வரும் அமைப்பில் அடையாளப்படுத்த முடியும்.

### *5.1. தனியார் வகுப்புக்கள்*

தனியார் வகுப்பு என்பது பாடசாலை கல்விசார் பாடங்களுடன் பெறப்பட்ட அறிவினை மேலும் மேம்படுத்தும் ஓர் செயன்முறை இடம்பெறும் இடமாகும் (பிரேய மற்றும் லைகின்ஸ், 2012). அதேபோல், தனியார் வகுப்புக்கள் என்பது மாணவர்கள் தங்களது கல்வியில் மேலதிகமான அறிவினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் துறைசார் ஆசிரியர்களிடம், விரிவுரையாளர்களிடம் மற்றும் பட்டதாரிகளிடம் பணம் கொடுத்து தமது கல்விக்கு மேலதிமாக அறிவை பெற்றுக் கொள்ளும் செயன்முறையாகும் என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (றிஜ்சல், 2016). இத்தகைய தனியார் வகுப்புக்கள் இரண்டு வகையான கட்டமைப்பில் இடம்பெறுகின்றன. ஒன்று, மாணவர்கள் பாடஆசிரியர்களிடம் சென்று கற்றல். அதாவது பாடம் தொடர்பான ஆசிரியர்களை மாணவர்கள் தேடி கற்றல். இரண்டாவது, மாணர்களை தேடி ஆசிரியர்கள் சென்று கற்பித்தல்.

மேலும், யஹ்யா (2013) என்பவரின் ஆய்வில் ஜோர்டானில் தனியார் கல்வி என்பது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமான அறிவினை வழங்கும் முறை கொண்டு தனியார் வகுப்புக்கள் இருப்பதாக குறிப்பிடுகின்றார். அத்தோடு, ஜோர்டானில் மூன்று வகையான தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் அவற்றில் முதலாவது ஒன்றுக் ஒன்று பயிற்சி, அதாவது ஒரு ஆசிரியர் ஒரு மாணவனுக்கு மாணவனின் வீட்டில் சென்று கற்பிக்கும் முறையாகும். இம் முறையில் மாணவன் ஒரு மணித்தியாலத்திற்கு உயர்வான ஊதியம் வழங்குவார். இரண்டாவது வகையில் பாடசாலை ஆசிரியர்களின் திறமை மற்றும் நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையின் நிர்வாகத்தின் கீழ் பாடசாலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பாட ஆசிரியர் பாடசாலை வளாகத்தில் வகுப்புக்களை நாடாத்தும் முறையாகும். ஆனால் இம் முறையில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு மாறாக பாடசாலை அதிபரினால் ஆசிரியர்களுக்கு வெகுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் யஹ்யா (2013) விளக்குகின்றார்.

மேலும், மூன்றாவது வகையாக, ஜோர்டானில் உள்ள கலாச்சார மையங்ளே தனியார் வகுப்புக்களை நடாத்துகின்றன. குறைந்த கட்டணங்களை அறவிட்டு திறமையான ஆசிரியர்களைக் கொண்டு இம் மையங்கள் தனியார் வகுப்புக்களை நாடாத்தி வருகின்றன. ஜோர்டான் தலைநகரமான அம்மானில் இருநூற்றி அறுபத்து மூன்று கலாசார மையங்கள் உள்ளன. இவற்றில் நூற்று ஐம்பதற்கு மேற்பட்ட

மையங்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துகின்றன. இவ்வாறு மூன்று வகையான தனியார் வகுப்புக்கள் ஜோர்டானில் உள்ளது என யஹ்யா (2013) குறிப்பிடுவதோடு ஜோர்டானின் கல்வி அமைச்சு தனியார் வகுப்பு தொடர்பாக முன்வைக்கின்ற விளக்கத்தினை அடையாப்படுத்துகின்ற போது "ஏதேனும் எந்தவொரு வயதிலும் கட்டுப்படுத்தப்படாமல் எந்தவிதமான அறிவையும் திறமையையும் வழங்கும் கல்வி நிறுவனம் பயிற்சி அல்லது பயிற்சியின் காலம், பயிற்சி என்பது பயிற்சி வகுப்புக்களின் வடிவத்தில் உள்ளது." என தனியார் வகுப்பை வரையறை செய்வதாக விளக்குகின்றார்.

மேற்குறித்த விளக்கமானது, தனியார் வகுப்புக்கள் என்பது மாணவர்களின் வீட்டில் சென்று கற்பித்தல், பாடசாலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கற்பித்து கட்டணங்களை அறவிடும் முறையாகும். இதேபோன்று துருக்கியில் தனியார் வகுப்பு என்பது, உயர் சித்தியடைந்து பல்கலைக்கழக வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை மாணவர்கள் தங்களது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு பணம் கொடுத்து கல்வியை பெற்றுக்கொள்ளும் முறையாக தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன (Asith, 2014).

மேலும் துருக்கியில் மூன்று வகையான தனியார் வகுப்பு முறைகள் உள்ளன. அவை, முதல் முறை ஒன்றுக்கு ஒன்று தனிப்பயனாக்கப்பட்ட கற்பித்தல், அதாவது ஒரு ஆசிரியர் ஒரு மாணவனுக்கு, மாணவனின் வீட்டில் சென்று கற்பிக்கும் முறையாகும். இம் முறையில் மாணவன், ஒரு மணித்தியாலத்திற்கு உயர்வான ஊதியம் ஆசிரியருக்கு வழங்குவார். இம் முறைமையின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துவார்கள் (கிரே மற்றும் அஸித், 2014).

இரண்டாவது முறை, இவற்றில் பாடசாலை ஆசிரியர்களினால் பாடசாலையில் குறைந்த மதிப்பெண்களை பெறும் மாணவர்களைக் கொண்டு நடாத்தும் முறை. இவற்றில் மாணவர்களிடம் பெறுமதியான கட்டணங்கள் அறவிடப்படும். மூன்றாவது முறை, துருக்கி தேசிய கல்வி அமைச்சின் அனுமதியுடன் நடைபெறுகின்றன "டெர்னே" என அழைக்கப்படும் தனியார் வகுப்பு நிலையங்களில் இவற்றை தொழில்முறை ஆசிரியர்கள் நடாத்துவார்கள். இம் முறைக்கு பொதுப் பாடசாலை ஆசிரியர்களுக்கு துருக்கி அரசினால் தடை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறன மூன்று முறைகளினடிப்படையில் துருக்கியில் தனியார் வகுப்புக்கள் நடைபெறும் என இவ்விரு ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர் (கிரே மற்றும் அஸித், 2014).

இலங்கையில் பெரும்பான்மையான தனியார்வகுப்புக்கள் இம் மூன்றாவது முறையில் இடம்பெறுகின்ற ஒன்றாகவுளள்ளன என அஸங்க (2012) குறிப்பிடுகின்றார். மேலும், தனியார் வகுப்புக்கள் என்பது மீத்திறன் குறைவான, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கே தேவையான ஒன்றாகும் (சந்டுரா, 2016). இவ்வாறான விளக்கத்தினையும், வரையறைகளையும் மற்றும் வகைகளையும் உலகளாவிய ரீதியாவும், இலங்கையிலும் தனியார் வகுப்புக்கள் கொண்டுள்ளன. இக்கட்டமைப்பின் அடிப்படையில் இலங்கையில் மூன்று வகையான தனியார் வகுப்புக்கள் காணப்படுகின்றன என அஸங்க (2012) அடையாளப்படுத்துகின்றார். ஒன்று, தனித்துவமான தனியார்வகுப்பு (Induvial tuition class) : இவ் வகையானது ஒன்று அல்லது மூன்றுக்கு குறைந்த மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கு முறை. இரண்டு, குழு தனியார்வகுப்பு (Group tuition class): இம் முறையானது 5-50 வரையிலான மாணவர்களை கொண்டு கற்பிக்கும் முறையாகும். மூன்றாவது, பொதுவான அல்லது மண்டப தனியார்வகுப்பு (Common or Hall tuition class) : இம் மூன்றாவது முறையில் 50-1000 வரையிலான மாணவர்களை பெரிய அறை ஒன்றில் உள்ளடக்கி பாடங்களை பொதுவாக கற்பிக்கும் முறை.

எனவே இவ் விளக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வானது "தனியார் வகுப்புக்கள் என்பது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக அறிவினையும் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்கள் பணம் செலுத்திக் கற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கல்விசார் அமைப்பாகும்" என வரையறை செய்கின்றது. இவ்வெண்ணகரு விளக்கதினை கொண்ட தனியார் வகுப்பின் உருவாக்கத்தில் அல்லது வளர்ச்சியில் எவ்வாறான கல்வி, அரசியல் மற்றும் பொருளாதார பின்னணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பவற்றை பின்வரும் அமைப்பில் நோக்க முடியும்.

### *5.2. தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற கல்விப் பின்னணி*

இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளில் கல்விப் பின்னணி முக்கிய இடத்தினை பெறுகின்றது. 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதாவது இலங்கையில் தனியார்மயமாதலுக்கு முன்னர் இலங்கையின் கல்வியில் தனியார் துறைக்கு வாய்ப்புக்கள் காணப்படவில்லை இதன்காரணமாக தனியார் வகுப்புக்கள் பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிமுகம்மில்லாத ஒன்றாகக் காணப்பட்டன (அலிசானா, 2010). இருந்த போதிலும் அக்காலத்தில் தனித்தவமான மேலதிக வகுப்புக்கள் பொருளாதார வசதியுள்ள குடும்பப் பின்னணியுள்ள மாணவர்களிடம் அறிமுகமான ஒன்றாக காணப்பட்டது. ஏனெனில் அரச பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக பணம்படைத்த பெற்றோர்கள் இப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நாடி தங்களது பிள்ளைகளுக்கு தேவையான வகுப்புக்களை பணம் கொடுத்து தனியார் வகுப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தனர். இவ்விடயமானது, தனித்துவமான வகுப்புக்கள் பிற்காலத்தில் தனியார் வகுப்பு நிலையங்கள் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன (அலிசானா, 2010). எனவே இக்காலத்தில் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் காணப்பட்ட பாட ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடியது பிற்காலத்தில் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்தியுள்ளது, எனலாம்.

மேலும் இதேபோன்று, இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாகி வளர்ச்சியடையச் செல்வாக்கு செலுத்தியுள்ள காரணங்களில் ஒன்று பல்கலைக்கழக வாய்ப்புக்கள் என தமயேந்தி (2017), அஸங்க (2012), றஜல் (2016) போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களில் அஸங்க (2012), 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மாணவர்கள் தங்களது உயர்பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்பதற்காக அனுமதி பெறுவதற்கு உயர்வான கல்வியடைவினை பெறவேண்டும் என்பதன் காரணமாக. பாடசாலைகளில் ஆசிரியர்களினால் வழங்கப்படுகின்ற பாடவிளக்கம் போதாமை காரணமாக சிறப்பு தேர்ச்சிகள் பெற்று பல்கலைக்கழக வாய்ப்பினையோ, உயர் கல்வி வாய்ப்பினையோ பெற்றுக் கொள்ள முடியாது என்பதனால், அரச பாடசாலை மாணவர்கள் தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரிகளிடம் தனியார் வகுப்புக்களை நாடினர் எனக் குறிப்பிடுகின்றனர். அத்தோடு, இலங்கையில் பதினைந்து அரச பல்கலைக்கழகங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக இப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்க அனுமதி பெறுவது மிகப் போட்டியாக அமைந்த சூழ்நிலைகள், உயர் பெறுபேறுகளை பெற தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர் (அஸங்க, 2012). எனவே இவ்வாய்வாளர்களின் கருத்தப்படி தனியார் வகுப்புக்கள் இலங்கையில் வளர்ச்சியடைய செல்வாக்கு செலுத்தியுள்ள காரணங்களில் ஒன்றாக மாணவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பினை பெற்றுகொள்வது, எனும் விடயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாகி வளர்ச்சியடைய செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணங்களில் மற்றுமொரு காரணம் மாணவர்கள் அரச போட்டிப் பரீட்சைகளுக்கு தயாராகுதல் காணப்படுவதாக அஸங்க (2012) மற்றும் றஜல் (2016) போன்வர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது இலங்கையில் பாடசாலைக் கல்வியைப் பெறுகின்ற மாணவர்கள் மூன்று வகையான போட்டிப் பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல்நிலை உள்ளது. ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சை, இவற்றில் சித்தியடைந்து புலமைப்பரிசில் உதவியைப் பெறவேண்டும் என்பதற்காகவும், கல்விப்பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபெற்றினை பெற்றுக் கொண்டு உயர்தரத்தில் தனக்கு பிடித்த பிரிவினை தெரிவு செய்து கல்வி கற்க வேண்டும் என்பதற்காகவும் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்று உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பினை பெற்று கொள்ள வேண்டும். போன்ற கல்வி பின்னணிகளினால் மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடினார்கள் இந் நிலை 2000ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் அதிகமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக இலங்கையில் 2000ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் தனியார் வகுப்புக்கள் படிப்படையாக வளர்ச்சியடைந்தது (தமயேந்தி, 2017). எனவே இவ் விளக்கத்தினடிப்படையில் நோக்கின்ற போது, இலங்கையில் பல்கலைக்கழக வாய்ப்பு என்பது மிக போட்டித்தன்மையானதும், அரிதான ஒன்றாக காணப்படுவதனால் மாணவர்கள் தங்களது அறிவினை எவ்வாறாயினும் மேம்படுத்தி உயர் கல்வி வாய்ப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் வகுப்பினை நாடுவது அதிகரித்துள்ளது.

மேலும், 1995ஆம் ஆண்டின் பின்னர் அரச பாடசாலைகளில் ஒரு வகுப்பறையில் 15-25 மாணவர்களே காணப்பட வேண்டும். இருப்பினும் ஒரு வகுப்பறையில் 30-50 மாணவர்களை கொண்டு உயர்வடைந்ததன் காரணமாக. மாணவர்கள் பெற்றோர்களின் செல்வாக்கினால் தனியார் வகுப்புக்களுக்கு செல்கின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன (அலிசானா, 2010) எனவே அரச பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததனால் மாணவர்கள் பாடங்களை விளங்கிக் கொள்வதற்கு சிரமம் காணப்பட்டதன் காரணமாகவும் மாணவர்கள் இப் பாட விளக்க குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு தனியார் வகுப்பு ஆசிரியர்களை நாடியதன் காரணமாகவும் தனியார் வகுப்புக்கள் இலங்கையில் உருவாகி வளர்ச்சியடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அத்தோடு, தனியார் வகுப்புக்கள் இலங்கையில் உருவாகி வளர்ச்சியடையச் செல்வாக்குச் செலுத்தியதன் காரணமாக, பாடசாலை ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துதல் ஆரம்பமானது. அந்தவகையில் இலங்கையில் காணப்படுகின்ற தனியார் வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் எழுபத்தொன்பது வீதமான (79%) ஆசிரியர்கள் அரச பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களாக காணப்படுகின்றார்கள் (தமயேந்தி, 2017).

எனவே பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய மாலை நேரங்களிலும், அதிகாலை நேரங்களிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் தனியார் வகுப்புக்களை நடாத்துவதோடு தனது பாடசாலை வகுப்பு மாணவர்களை தனது தனியார் வகுப்பு பாடங்களுக்கு வருமாறு கட்டாயப்படுத்துவதோடு ஆரம்ப காலங்களில் பொருளாதார வசதியுள்ள மாணவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு சென்று மேலதிக வகுப்புக்களை நாடாத்துகின்ற ஆசிரியர்களில் பெரும்பாண்மையானவர்கள் அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகும் (தமயேந்தி, 2017). ஆகவே இவ்வாறு பாடசாலை ஆசிரியர்கள் தங்களது பொருளாதார நாட்டதிற்காக தனியார் வகுப்புக்களை ஓர் யுக்தியாக பயன்படுத்தியதன் காரணமாக தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டதோடு, வளர்ச்சியடைந்து கொண்டே வந்துள்ளன. எனவே இவ்வாறான பல கல்விப் பின்னணிகள், இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து வருவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. எனவே, வரலாற்று ரீதியாக நோக்குகின்ற போது இலங்கையில் ஆரம்ப காலத்தில் வசதிபடைத்தவர்களே தனியார்வகுப்புக் கல்வியினை பெற்றுக் கொண்டனர். இதனால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைய காரணமாக ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துதல், வகுப்புக்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம், தனியார் வகுப்புக்களில் பாடவிளக்கம் தெளிவாக விளக்கப்படுதல் என்பன அமையப்பெறுகின்றன.

### *5.3. தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் அரசியல் பின்னணி*

இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் கல்விப் பின்னணியானது செல்வாக்குச் செலுத்துவது போல, அரசியல் பின்னணிகளின் செல்வாக்கும் மிகப் பிரதான இடத்தினைப் பிடித்துள்ளது. அந்தவகையில் இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் அரசியல் பின்னணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை ஆராய்கின்ற போது,

1978ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் அரசியல் செயற்பாடுகளில் தனியார் துறைகளின் வளர்ச்சி மிக குறைந்தளவிலேயே காணப்பட்டன. பின்னர் 1980ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள பொருளாதார முறையின் கீழ் இலங்கையில் தனியார்மயமாக்கல் அறிமுகமாகி வளர்ச்சியடைத்தொடங்கியது. எவ்வாறு வர்த்தகம், வணிகம், கைத்தொழில்கள் தனியார் மயப்பட்டதோ, அதே போன்று கல்வியும் தனியார்மயப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனியார் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உருவக்கப்பட்டதை போன்று தனியார் வகுப்புக்களும் உருவாக்கப்பட்டன (அலிசானா, 2010). இவ்வாறு அரசாங்கத்தினால் தனியார் துறைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டதனால் கல்வித்திட்ட பாடங்களை தனியார் வகுப்புக்களாக நடாத்த ஆரம்பித்தனர்.

மேலும் இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற மற்றுமொரு அரசியல் காரணியாக இலங்கை சட்ட முறைகளில் தனியார் வகுப்பு தடைச்சட்டம் இல்லாமை என்பது குறிப்பிடத்தக்கது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதாவது இலங்கையில் இலவசமான முறையில் கல்வி வழங்கப்படுகின்ற போதும் நாளுக்கு நாள் தனியார் வகுப்புக்களின் உருவாக்கம் அதிகரித்து வருகின்றது அது பாடசாலைக் கல்வியில் எதிர்மறையான பல தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதற்கு பிரதான காரணம் தனியார் வகுப்புக்களைக் குறைக்க வேண்டும் அல்லது தடுக்க வேண்டும் என்பது தொடர்பாக எந்தவிதமான சட்டமும் இலங்கையில்

காணப்படவில்லை. இலங்கையில் மறைமுகமான முறைகளில் அரசியல்வாதிகள் தனியார் வகுப்புக்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதால், தனியார் வகுப்புகளின் உரிமையாளர்கள் சுதந்திரமாக தனியார் வகுப்புக்களை உருவாக்குவதனால், இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து வருகின்றன (பௌஸர், 2020). ஆகவே தனியார் வகுப்புக்கள் உருவாகுவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் தடையாக எவ்விதமான சட்டங்களும் இல்லாததன் காரணமாக தனியார் வகுப்புக்கள் உருவாகி வளர்ச்சியடைவது காணப்படுகின்றது.

இதேபோன்று தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய அரசியல் காரணிகளில் ஒன்றாக இலங்கையின் கல்விப் பொதுத்துறைகள் மீதான பொது மக்களின் நம்பிக்கையீனம் அமைகின்றது. அதாவது இலங்கையில் பொதுமக்களுக்காக இடம்பெறுகின்ற பொதுச்சேவைகளின் மீது நம்பிக்கை குறைவாக உள்ளது. குறிப்பாக பாடசாலைகளின் கல்விச் சேவைகளின் மீது நம்பிக்கை குறைவு என்பதனால் இலங்கையில் தனியார் வகுப்புக்களும் உருவாக்கப்படுகின்றன (பௌஸர், 2020). அதாவது பாடசாலைகளில் ஆசிரியர்கள் நடாத்தும் பாடமுறைகளிலும், பாட ஆசிரியர்களின் கவர்ச்சியற்ற பாடவிளக்கத்தின் காரணமாக மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடுகின்றனர் (சந்துர, 2016). ஆகவே பொதுமக்களிடம் காணப்படுகின்ற பாடசாலைக் கல்வியின் மீதான திருப்தியின்மை போன்ற தப்பபிப்பிராயத்தினால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைவதற்கு காரணமாக உள்ளது.

அத்தோடு, இலங்கையின் கல்விக் கொள்கையின் பலவீனமும் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சி யடைவதற்கு செல்வாக்குச் செலுத்தியுள்ளன (பௌஸர், 2020). அதன்படி இலங்கையின் கல்விக் கொள்கையின்படி மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வியை இலவசமாக வழங்கவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டுள்ளதோடு, தனியார் வகுப்புக்கள் இலவசக் கல்விக்கு தடையாக இருந்தும் அவற்றை தடுப்பதற்கான எந்தவிதமான கொள்கைகளையும் கொண்டின்மை எனும் பலவீனத்தால் இலங்கையின் கல்விக் கொள்கை தனியார் வகுப்புக்கள் உருவாகுவதற்கு பின்னணியாக அமைகின்றது (பௌஸர், 2020).இதே போன்று இலங்கையில் சில அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் தனியார் வகுப்பினை ஆதரித்து, தனியார் வகுப்புக்களை நடாத்துவதனாலும் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைகின்றன (சந்துரா, 2016).

எனவே இவ்வறான தனியார்மயமாக்கல், தனியார் வகுப்பு தடைச்சட்டம் இன்மை, பொதுத்துறைகள் மீது பொது மக்களுக்கு நம்பிக்கையீனம், கல்விக் கொள்கையின் பலவீனம் போன்ற அரசியல் காரணங்களின் செல்வாக்கினால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து வருவதற்கு ஏதுவான காரணிகளாக அரசியல் காணப்படுகின்றது.

### *5.4. தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் பொருளாதார பின்னணி*

இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் எவ்வாறு கல்வி மற்றும் அரசியல் பின்னணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றதோ அதே போன்று பொருளாதாரப் பின்னணிக் காரணிகள் அமைந்துள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். எனவே இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் பொருளாதாரப் பின்னணி எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை நோக்குகின்ற போது. இலங்கையில் குடும்பங்களின் வருமான வளர்ச்சி அதிகரிப்பு தனியார் வகுப்புக்கள் உருவாகுவதனை ஊக்குவித்தாக அஸங்க (2012) மற்றும் றஜல் (2016) போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, பின்காலணித்துவக் கால இலங்கையில் பொருளாதாரம் மற்றும் குடும்ப வருமானம் வளர்ச்சியடைய ஆரம்பமானதைத் தொடர்ந்து மக்களின் கல்விநிலை வளரச்சியடைய ஆரம்பமானது. அதாவது 1980ஆம் ஆண்டுகளின் பிற்பாடு உயர்வர்க்கப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் பாடசாலைகளில் உயர்வான கல்வி அடைவுகளை அடைய வேண்டும் என்பதனால் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக பாட ஆசிரியர்களுக்கு பணம் கொடுத்து தங்களது பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புக் கல்வியை வழங்குகின்றார்கள் (அஸங்க, 2012 றஜல், 2016) இவ்வாறு உயர்வர்க்க மாணவர்கள் மாத்திரம் தனித்துவமான வகுப்புக்கள் குழு வகுப்புக்களாக தனியார் வகுப்புக் கல்வியை பெற்ற நிலையில், 2006-2007 ஆண்டுகளில் குடும்பங்களின் வருமானம் வளர்ச்சியடைந்ததை தொடர்ந்து நடுத்தர வர்க்கத்தினர் பொருளாதாரரீதியாக வளர்ச்சியடைந்ததன் காரணமாக அவர்களின் பிள்ளைகளும் தனியார் வகுப்புக் கல்வியை பெற்றுக்கொள்வதில் ஆர்வம் செலுத்தினர் (அஸங்க, 2012 றஜல், 2016). இதன்காரணமாக குழுவாக இடம்பெற்ற தனியார் வகுப்புக்கள் தனியான நிறுவனமாக இயங்க ஆரம்பமானது

குறிப்பாக கொழும்பு, கண்டி, குருநாகல், கம்பஹா, மற்றும் யாழ்பாணம் போன்ற நகரங்களில் இத்தகைய தனியார் வகுப்புக் கல்வி நிலையங்கள் தோற்றம் பெற்றன (அஸங்க, 2012 றஜல், 2016)

அதேபோல, தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ள பொருளாதார காரணிகளை நோக்குகின்ற போது, மேலே குறிப்பிட்டதை போன்று 1995-1996ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வீட்டு வருமானம் இருநூற்று எழுபது அமெரிக்க டொலராக காணப்பட்டது, 2006-2007ஆம் ஆண்டுகளில் ஆயிரத்து நாநூறு அமெரிக்க டொலராக வளர்ச்சியடைந்ததன் காரணமாக பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் தனியார் கல்விக்கான செலவு சவாலாக அமையவில்லை இதனால் மாணவர்கள் தனியார் வகுப்புக் கல்வியில் தடையின்றி ஆர்வம் செலுத்திவந்துள்ளனர் (அஸங்க, 2012). ஆகவே, இலங்கையில் குடும்பங்களின் வாழ்வாதார வருமானங்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக உயர் வருமான குடும்பங்களிலுள்ள மாணவர்கள் எவ்விதமான தடைகளுமின்றி தனியார் வகுப்புக்களுக்கு செல்வதற்கான சூழல் உருவானதன் காரணமாக, இலங்கையில் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைந்துள்ளதாக மேற்குறிப்பிட்ட ஆய்வாளர்களின் ஆய்வினூடாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

இதேபோன்று, இலங்கையில் பொதுப் பாடசாலைகளுக்கான செலவுகள் அதிகரிக்கப்படாமை காரணமாகவும் மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு முக்கியம் வழங்கியதன் காரணமாகவும் தனியார் வகுப்பு நிலையங்கள் வளர்ச்சியடைய ஆரம்பமானது (அஸங்க, 2012). அதாவது, இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 2011ம் ஆண்டு அறிக்கையின் படி 1995-1996ஆம் ஆண்டுகளில் பொதுப் பாடசாலைகளுக்கான செலவு 10.42% காணப்பட்டது. இது 2006-2007ஆம் ஆண்டுகளில் 9.98% குறைவடைந்தது. இதன் காரணமாக தனியார் வகுப்புக் கல்வியின் தேவை அதிகரித்தது. இவ்வாறான காரணங்களினால் இலங்கையில் தனியார் வகுப்புக் கல்வியின் தேவை உணரப்பட்டு வளர்ச்சியடைந்தன (அஸங்க, 2012). எனவே, இலங்கையில் தனியார் வகுப்பு நிலயங்கள் உருவாகி, வளர்ச்சியடையச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் பொதுப் பாடசாலைகளுக்கான செலவுகள் அதிகரிக்கபடாமை காரணமாக அமைந்துள்ளது என்பதை இவ் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. எனவேதான் பாடசாலைகளில் காணப்பட்ட வளப்பற்றாக் குறைகளின் காரணமாக மாணவர்கள் தங்களது கல்விக்காக பாடசாலைக் கல்வியைவிட தனியார் வகுப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கியதன் காரணமாக இலங்கையில் தனியார் வகுப்புக்கள் முக்கியத்தவம் வாய்ந்ததாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன.

அதேபோல, ஆசிரியர்களின் பொருளாதார நாட்டம் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடையக் காரணமாக அமைந்துள்ளது. அதாவது, ஏற்கனவே குறிப்பிட்டதை போன்று இலங்கையில் காணப்படுகின்ற தனியார் வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் எழுபத்தொன்பது வீதமான (79%) ஆசிரியர்கள் அரச பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களாக வுள்ளனர்(தமயேந்தி, 2017). பாடசாலை ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துவதற்குப் பிரதான காரணம் தமது சேவைக்காக அரசினால் வழங்கப்படும் மாதாந்த சம்பளம் போதாமையாக இருக்கின்றது. இதன் காரணமாக தமது வளத்தைப் பயன்படுத்தி தனது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்கான அரச பாடசாலை ஆசிரியர்கள் தனியார் வகுப்புகளை உருவாக்கி நடாத்தி வந்துள்ளனர் (தமயேந்தி, 2017). எனவே, ஆசிரியர்கள் தங்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தனியார் வகுப்புக்களை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டுள்ளதன் காரணமாக மாணவர்கள் கட்டாயமாக தனியார் வகுப்புக்களுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்பட்டதனாலும், தனியார் வகுப்புக்கள் உருவானதற்கு குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சியும், மாணவர்களுக்கு தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைய ஏதுவாக அமைந்துள்ளன.

மேலும், வர்த்தகர்களின் வியாபார யுக்திகள் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் ஒரு காரணியாக அமைவதனை குறிப்பிட முடியும். தனியார் வகுப்புக்கள் நடாத்ததும் உரிமையாளர்கள் தனியார் வகுப்புக்களை வியாபாரமாகவே நோக்குகின்றார்கள். அதாவது தமது பொருளாதார வளம், பௌதீகவளம் என்பவற்றை கொண்டு துறைசார் ஆசிரியர்களினூடாக, மாணவர்களுக்கு தனியார் வகுப்புக்களை வழங்கி அதன் மூலம் பொருளாதாரத்தினை பெற்றுகொள்ள முடியும் எனும் வியாபார யுக்தியுடன் இலங்கையில் தனியார் வகுப்புக்களை வியாபாரிகள் உருவாக்கியுள்ளனர் (சந்துரா, 2016). ஆகவே, கல்வியினை வியாபாரமாக பயன்படுத்திய வியாபாரிகளின் வியாபார யுக்தியின் காரணமாக தனியார் வகுப்புக்கள் தொடர்பான கவர்ச்சியான விளம்பரங்கள், மாணவர்களையும்

பெற்றோர்களையும் கவர்ந்ததன் காரணமாக தனியார் நிலையங்களை நோக்கி மாணவர்கள் சென்றதனால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்துள்ளன.

எனவே, குடும்பங்களின் வருமான வளர்ச்சி அதிகரிப்பு, பொதுப் பாடசாலைகளுக்கான செலவுகள் அதிகரிக்கப்படாமை, ஆசிரியர்களின் பொருளாதார நாட்டம், வர்த்தகர்களின் வியாபார யுக்தி போன்ற பொருளாதாரப் பின்னணிகளின் உதவியுடன் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்துள்ளன.

## 06. முடிவுரை

இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பகுப்பாய்வு செய்யும் நோக்கமாக கொண்ட இவ்வாய்வானது பல்வேறு காரணிகளை அடையாளம் கண்டுள்ளது. எனவே இலங்கையில் இலவசமான கல்விமுறை காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மாணவர்கள் தங்களது மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் வகுப்புக்களை நாடுவதில் பல்வேறு பிண்ணனிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது கல்விப் பின்னணி, பொருளாதாரப் பின்னணி மற்றும் அரசியல் பின்னணிகள் என்பனவும் செல்வாக்குச் செலுத்தியதோடு, ஆரம்பகாலங்களில் தனியார் வகுப்புக்களை உயர் வர்க்க குடும்பத்தினைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது உயர் பொருளாதாரத்தின் ஊடாக பாடத்தில் சிறப்புத் தேர்ச்சியடைந்த கல்வியாளர்களைக் கொண்டு தனித்துவான வகுப்புக்களின் (Individual class) வழியாக பெற்றுக் கொண்டனர். இவ்வாறான தொடக்கப் பின்னணியுடன் ஆரம்பமான தனியார் வகுப்பானது: பாடசாலை ஆசிரியர்கள் தங்களது பொருளாதார நாட்டதிற்காக தனியார் வகுப்புக்களை ஓர் யுக்தியாக பயன்படுத்தியதன் காரணமாக தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டதோடு, வளர்ச்சியடைந்து கொண்டே வந்துள்ளன. எனவே இவ்வாறான பல கல்விப் பின்னணிகள், இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து வருவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

எனவே, வரலாற்று ரீதியாக நோக்குகின்ற போது இலங்கையில் ஆரம்ப காலத்தில் வசதிபடைத்தவர்களே தனியார்வகுப்புக் கல்வியினை பெற்றுக் கொண்டனர். இதனால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் வளர்ச்சியடைய காரணமாக ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துதல், வகுப்புக்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம், தனியார் வகுப்புக்களில் பாடவிளக்கம் தெளிவாக விளக்கப்படுதல். மேலும், தனியார்மயமாக்கல், தனியார் வகுப்பு தடைச்சட்டம் இன்மை, பொதுத்துறைகள் மீது பொது மக்களுக்கு நம்பிக்கையீனம், கல்விக் கொள்கையின் பலவீனம் போன்ற அரசியல் காரணங்களின் செல்வாக்கினால் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து வருவதற்கு ஏதுவான காரணிகளாக அரசியல் பின்னணி காணப்படுகின்றன. இதேபோன்று, குடும்பங்களின் வருமான வளர்ச்சி அதிகரிப்பு, பொதுப் பாடசாலைகளுக்கான அரச செலவுகள் அதிகரிக்கபடாமை ஆசிரியர்களின் பொருளாதார நாட்டம், வர்த்தகர்களின் வியாபார யுக்தி போன்ற பொருளாதாரப் பின்னணிகளின் உதவியுடன் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைந்துள்ளன. ஆகவே இவ்வாறான கல்வி, பொருளாதார மற்றும் அரசியல் பின்னணிகளின் உதவியுடன் இலங்கையில் தனியார் வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளன என்பதனை இவ்வாய்வானது அடையாளப்படுத்துகின்றது.

## உசாத்துணைகள்

Alishana. (2010). *A Study on the role of Private Education Institution for the Secondary and Tertiary Education Development in Kalmunai Municipal Area From 2004-2009*. Unpublished Thesis (B.A), Department of Social Sciences. South Eastern University Of Sri Lanka).

Asanka, P. (2012). *Demand for private tutoring in a free education country: the case of Sri Lanka*. Retrieved From https://www.researchgate.net/publication/258521104.

Bineth, A. (2020). *Towards A Sociological of Curiosity; Theoretical and Empirical Consideration of the Epistemic Drive Notion*. (Master thesis, Central European University, Budapest, Hungary). Retrieved from https://sociology.ceu.edu/sites/sociology.ceu.hu/files/profilephd/files/499/binethmatscsingle.pdf

Bray, M & Kwok, P. (2003). *Demand for private supplementary tutoring: Conceptual consideratins, and socioeconomic patterns in Hong Kong.* Economic Education Review. Retrieved from https://www.sciencedirect.com/science/article/abs/pii/S0272775703000323

Damayanthi, B.W.R. (2017). *Economics of private tutoring in Sri Lanka: A phenomenologyical study.Journal of Education and Practice.*Retrieved From https://www.iiste.org/.

Damayanthi, B.W.R. (2018). *The Determination of Demand for pivate tutroring in Sri Lanaka.*Published by European Centre for Research Training and Development UK. Retrieved From https://www.eajournals.org.

Davies, S. (2004). *School choice by Default? Understanding the Demand for private Tutoring in Canada.* America Journal If Education. Retrieved From https://www.journals.uchicago.edu/doi/abs/10.1086/383073

Gafoor, A.K., & Sunummel, M.(2007).*Effect of Priavte tuition on Acchivement in Science of seconfary Scool Pupils.*Journal of Community Guidance & Research.

Giray, B & Aysit, T. (2014.*Does private tutoring increase students' academic performance from Turkey*. Discussion paper series.SDD

Gobiga, K. (2017). *The Study on Parents Perception on Emerging Trend Of Private Tuition Classes Towards Their Children's Education in Kalwanchikudy D.S Division in Batticaloa.* 7th International Symposium. SEUSL. Retrieved from http://www.seu.ac.lk/researchandpublications/symposium/7th/Inaternational%20Symposium%202017%20-%20SEUSL%20(9).pdf

Habashneh, M., & Al-Maimi, E. (2006).*Survey on the Private Tutoring Phenomenology reasons and its educational Implications*. Ministry of Education: Department of research and Educational Development.

Hartary, F & Renner, B. (2018). Social Curiosity and Gossip: Related but different drives of Social functioning. PLOS ONE. https://journals.plos.org/plosone/article?id=10.1371/journal.pone.0069996

JiYunLee. (2013).*Private tutoring and its impact on students' academic Achievement, formal Scooling and Educational inequality*. Columbia University.

Qaise, S & Ishtiaq, H. (2014).*Efects Of private tuition on the Acadimic achievement of secondary scool Studentds' in subject of Mathematics in Kohat Division, Pakistan*. Retrieved From https://www.researchgate.net/publication/275966799

Rachel, C. (2016). *Estimating the impact of private tutoring on academic Performance: Primary Students in Sri Lanka*. Retrieved from https://www.researchgate.net/publication/3046177.

Saul ,E & Adeline,P.(2018). *Privatization in Developing Countries: What Are the Lessons of Recent Experience?. The World Bank Research Observer.* Retrieved From https://academic.oup.com/wbro/article/33/1/65/4951686

Shandru, M.(2016). *Impacts of advance level formal education system by the domination of private tution class: the research based on manmunai north area, educational zone-batticaloa.* 6th International Symposium 2016. South Eastern University of Sri lanka. Retrieved From http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/2012/IntSym_2016_proceeding_final_2_%281%29_-_Page_765-775.pdf?sequence=1&isAllowed=y